[24th January 1972

(3) PANEL OF VICE-CHAIRMEN.

MR. CHAIRMAN : I have to announce to the House that under rule 14 of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members of the Legislative Council to be the Panel of Vice-Chairmen for the Forty-first Session of the Legislative Council under the Constitution :

1. Thiru R. Dharmalingam.
2. Thirumathi S. Manjubhashini.
3. Thiru S. Jayarama Reddiar.
4. Thiru T. K. Shanmugam.

IV. Statement by the Hon. Minister for Food and Revenue correcting the answer to a Supplementary question on Starred Question No. 160.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அவசரம் காரணமாக மதிப்புக் குறைவாக எழுதிக் கொடுக்கப்பட்ட, ஆவணங்களை முதலில் பதிவு செய்து கொண்டு, வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை செய்யும் போது, பற்றுக்குறையாகவுள்ள முத்திரைத்தாள் தீர்வை வசூலிக்கப்படுமா என்று 21—7—1971 நாளிட்ட 160-ஆம் எண் வினாவிற்குத் துணை வினா ஒன்றை திரு. டி. சுப்பையா, எம்.எல்.சி. அவர்கள் விடுத்தார். சட்டத்தில் அதற்கு விதித்துறை ஏதுமில்லையென்று மேலவைக்கு நான் தெரிவித்தேன்.

ஒப்படைப் பத்திரம், பரிமாற்ற பத்திரம் அல்லது நன்கொடைப் பத்திரம் ஒன்றைப் பதிவு செய்யும்போது, ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொத்தின் மதிப்பு அங்காடி மதிப்பிற்கு உண்மையானதல்ல என்று பதிவு அதிகாரி நம்புவதற்குக் காரணமிருந்தால், அவர் அத்தகைய ஆவணத்தை அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்கும் சரியான முத்திரைத் தாள் தீர்வை வசூலிப்பதற்கும் "மாவட்ட ஆட்சித் தலைவருக்கு" (வருவாய் கோட்ட அதிகாரி) அனுப்ப 1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டத்தின் 47-ஏ பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது என்பதுதான் இது குறித்து சரியான நிலையாகும். எனவே, ஓர் ஆவணத்தைப் பதிவு செய்வதற்கும், துண்டு விழும் முத்திரைத்தாள் தீர்வையை வசூலிப்பதற்கும் விதித்துறை உள்ளது. எனவே 47-ஏ பிரிவின்கீழ் ஓர் ஆவணம் பதிவு செய்யப் பெறுவதற்கு குறிப்பிட்ட ஒரு நபர் அவசரப்பட்டாலும், அவசரப்படாவிட்டாலும், அந்தச் சொத்து குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதென்று துணைப் பதிவாளர் கருதினால் அந்த ஆவணம் "மாவட்ட ஆட்சித் தலைவருடைய" (வருவாய் கோட்ட அதிகாரி) கருத்தை அறிவதற்காக அனுப்பபடவேண்டும். சரியான முத்திரைத் தாள் தீர்வை மதிப்பிடப்பட்டு வசூலிக்கப்படும்வரை அந்த ஆவணம் அரசின் துறைகளிடம் இருக்கவேண்டும். அந்த ஆவணம் சம்பந்தப்பட்ட நபருக்கு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது அமைச்சரவர்கள் தந்த திருத்தம் சம்பந்தப்பட்ட இந்த அரசாங்க உத்திரவு நமது ஹைகோர்ட்டில் ஏதோ செல்லாது என தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், இம்மாதிரி பதியும் பத்திரங்களில் நிலத்தை ஏற்கெனவே என்ன விலைக்கு வாங்குகிறார்களோ அந்த விலைக்குத் தான் ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமேயொழிய, உத்தேசமாக இன்ன மதிப்பு இருக்கும் என்று ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்று சொல்லி வசூலிப்பது சரியல்ல என்று தீர்ப்பு வந்திருப்பதாகப் பத்திரிகைகளில்

பார்த்தேன். இதில் அரசாங்கத்தின் நிலை என்ன? அப்பீல் செய்யப் போகிறார்களா அல்லது அந்த உத்திரவை ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஒவ்வொரு பதிவு அனுவலகத்திற்கும் 'கைடு லைன்' என்று சொத்து மதிப்பைத் தயாரித்துக் கொடுத்து அனுப்பியிருந்தோம். அப்படிக் கொடுத்து விட்டிருப்பது சரியல்ல என்ற அளவிற்கு தீர்ப்பு அளித்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி படித்தோம். உயர் நீதி மன்றத் தீர்ப்பின் காப்பி இன்னும் வந்து சேரவில்லை. வந்ததற்குப் பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

## V. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

*திரு. வி. தங்கபாண்டியன்:* தலைவரவர்களே, "1972-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22-ம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத்தின் கூட்டுப் பேரவையில் உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற்காக தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று முன்மொழிகிறேன்.

*திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை:* இதை நான் வழிமொழிகிறேன்.

MR. CHAIRMAN: Motion moved—

**"That an humble Address be presented to the Governor that the Members of the Tamil Nadu Legislative Council thank him for the Address delivered to the Members of the Legislature on the 22nd January 1972".**

*திரு. வி. தங்கபாண்டியன்:* மேலவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்தக் கூட்டுக் கூட்டத்தில் தமிழ் நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளை விளக்கி, அதற்கு முன்னுரையாக இந்தியத் துணைக் கண்டம் சென்ற ஆண்டு இறுதியிலே பாகிஸ்தான் படையெடுப்புக்குத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அந்தப் படையெடுப்பிலே வெற்றிச் சிகரத்தைப் பொறித்து, உலக அரங்கில் இந்தியாவிற்கு ஒரு புதிய பெருமையும் சிறந்த மரியாதையும் ஏற்பட்ட நிகழ்ச்சியை எடுத்துக் கூறினார்கள். அதன் தொடர்பாக இந்தியக் துணைக் கண்டத்தில் ஒரு புதிய சுதந்திர வங்க நாடு உருவாகியிருக்கிறது. வங்கத்தின் உதயம் உலக வரலாற்றில் ஒரு மிகப் பெரிய திருப்பத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த வங்க நாட்டினுடைய தானைத் தலைவராகவும் அந்த நாட்டினுடைய இலட்சியபுரி வீரராகவும் உருவாவதற்கு தன்னுடைய கண்ணீரை, செந்நீரைச் சிந்திய விடுதலை வீரர் முஜிபூர் ரஹிமான் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றம் கேட்டுக் கொண்டது. இன்றைய தினம் அவர் விடுதலையாகி உலக அரங்கில் ஒரு புதிய நாட்டிற்குத் தலைவராக ஆகியிருக்கிறார். அந்த தானைத் தலைவருக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் நம் நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பது நம்முடைய தமிழ் நாட்டுப் பண்புக்கு உகந்தது என்ற முறையில் ஆளுநர் அவர்கள் தம்முடைய பேருரையில் இந்நிகழ்ச்சியை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அங்கு ஒரு பயங்கரமான நிலைமை ஏற்பட்டது நமக்கெல்லாம் தெரியும். ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிக்க முயன்றவர்கள் ஓட்டு முறையில் வெற்றிபெற்றவர்களை வேட்டு முறையால் அடக்கலாம் என்று எண்ணி

---

@ Printed as Appendix IV on pages 71